TAMILTH Tanjavur 1 Regional_02 221016 HT166128

திருக்குறள் பயிற்சி வகுப்பு தொடக்கம்

■ திருவாரூர்

திருவாரூர் மாவட்ட தமிழ் வளர்ச்சித் துறை சார்பில் திருத்துறைப்பூண்டி பகுதிகளில் உள்ள மாணவ, மாணவிகளுக்கு திருத்துறைப்பூண்டி புனித தெரசாள் பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் திருக்குறள் பயிற்சி வகுப்பு நேற்று தொடங்கியது.

திருவாரூர் மாவட்ட திருக்குறள் திருப்பணிகள் குழு ஒருங்கிணைப்பாளர் எடையூர் மணிமாறன் தலைமை வகித்தார். தமிழ்ப் பேராசிரியர் பன்னீர்செல்வம் உள்ளிட்டோர் பங்கேற்றனர். தமிழ் வளர்ச்சித் துறை அலுவலக உதவியாளர் வெற்றிச்செல்வன் வரவேற்றார். பயிற்றுநர் பன்னீர்செல்வம் நன்றி கூறினார்.

தஞ்சாவூர் மருதுபாண்டியர் கல்வியல் கல்லூரியில் நடைபெற்ற விழாவில் பேசிய தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர் கு.சின்னப்பன். உடன் மருதுபாண்டியர் கல்வி நிறுவனங்களின் தலைவர் கொ.மருதுபாண்டியன் உள்ளிட்டோர்.

மருதுபாண்டியர் கல்வியியல் கல்லூரியில்

இளங்கல்வியியல் முதலாம் ஆண்டு பட்ட வகுப்பு தொடக்க விழா

■ தஞ்சாவூர்

மருதுபாண்டியர் கல்வியியல் கல்லூரியில் இளங்கல்வியியல் முதலாம் ஆண்டு பட்ட வகுப்பு தொடக்க விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

மருதுபாண்டியர் கல்வி நிறுவனங்களின் தலைவர் கொ.மருதுபாண்டியன் குத்து விளக்கேற்றி தொடங்கி வைத்தார். கல்வியியல் கல்லூரி முதல்வர் சுப்பிரமணியன் வரவேற்றார். மருதுபாண்டியர் கல்லூரி ஆராய்ச்சி புலத் தலைவர் கோ.அர்ஜுனன், உயிர் தொழில் நுட்பவியல் துறைத் தலைவர் ராஜகுமார், உயிர் வேதியியல் துறைத் தலைவர் வே.ராமமூர்த்தி ஆகியோர் உரையாற்றினர்.

சிறப்பு விருந்தினராக பங்கேற்ற தமிழ்ப் பல்கலைக்கழக முன்னாள் பதிவாளர் மற்றும் கல்வியியல் துறைத் தலைவர் கு.சின்னப்பன் பேசியது:

கல்விதான் மனிதனை மாமனிதனாக மாற்றும். ஆசிரியர்களின் பண்புகளில் அன்பு, பணிவு, துணிவு, அடக்கம், முயற்சி வேண்டும். பாடத்தில் ஆழ்ந்த அறிவு, கற்பிக்கும் திறன், தொழில்நுட்பத் திறன் ஆகியவற்றை மாணவர்கள் பெற்று சிறந்த ஆசிரியராக திகழ வேண்டும் என்றார்.

கல்வியியல் கல்லூரி உதவிப் பேராசிரியர் தி.ரங்கம்மாள் தேவி நன்றி கூறினார். தமிழ்த் துறை உதவிப் பேராசிரியர் கி.உஷா தொகுத்து வழங்கினார்.

நல்லம்பல் ஏரியில் அனுமதித்த அளவைவிட

அதிக ஆழத்துக்கு மண் அள்ளுவதாக கிராம மக்கள் புகார்

மண் ஏற்றிச் சென்ற லாரிகளை சிறைபிடித்து போராட்டம்

■ காரைக்கால்

காரைக்கால் மாவட்டம் நல்லம்பல் ஏரியில் அரசு அனுமதித்த அளவைவிட அதிக ஆழத்துக்கு மண் அள்ளப்பட்டு வருவதாக குற்றம்சாட்டி, நேற்று மண் ஏற்றிச் சென்ற லாரிகளை கிராம மக்கள் சிறைபிடித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காரைக்கால் மாவட்டத்தின் மிகப்பெரிய ஏரியாக திருநள்ளாறு கொம்யூன் நல்லம்பலில் உள்ள ஏரி விளங்குகிறது. இந்த ஏரியில் அரசின் பல்வேறு வளர்ச்சித் திட்ட பணிகளுக்கு மண் அள்ளிக் கொள்ள ஒப்பந்ததாரர்களுக்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. ஆனால், அரசு அனுமதித்த அளவைவிட அதிக ஆழத்துக்கு மண் அள்ளப்படுவதாக நல்லம்பல் கிராம மக்கள் குற்றம்சாட்டி வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று ஏரியில் இருந்து மண் அள்ளிக் கொண்டு சென்ற லாரிகளை கிராம மக்கள் சிறைபிடித்து போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதுகுறித்து கிராம மக்கள் கூறியது:

நல்லம்பல் ஏரியில் வளர்ச்சித் திட்டப் பணிகளுக்காக கடந்த 3 ஆண்டுகளுக்கும் மேலாக மண் அள்ளி வருகின்றனர். அரசு அனுமதித்த அளவைவிட ஏரியில் பல இடங்களில் 60 அடி ஆழம் வரை மண் அள்ளிவிட்டனர். இதனால், நிலத்தடி நீர்மட்டம் குறைந்து, குடிநீர்த் தட்டுப்பாடு ஏற்படும் அபாயம் உள்ளது.

ஏரியில் மண் அள்ளிய இடத்தில்உள்ள ஆழமானபள்ளங்களில் மழைக் காலத்தில் நீர் தேங்கினால் ஆழம் தெரியாமல் மனித உயிரிழப்புகள் நேரிட வாய்ப்புள்ளது. ஏரியில் கட்டப்பட்ட சிமெண்ட் கரைகள் உடைக்கப்பட்டுள்ளன. இதனால், பருவமழைக் காலத்தில் ஏரிக்கு நீர் வரும்போது கரையில் உடைப்பு ஏற்பட்டு நல்லம்பல், குமாரக்குடி, சேத்தூர் ஆகிய பகுதி மக்களுக்கு பாதிப்பு ஏற்படும் அபாயம் உள்ளது.

மழையின்போது ஏரியின் ஆழமான பகுதிக்கு நீர் ஓடி தேங்குவதால் குடியிருப்புப் பகுதிகளில் உள்ள ஆழ்துளை கிணறுகளுக்கு நீர் கிடைப்பதில்லை. எனவே, அரசுத் துறை அலுவலர்கள்ஏரியைஉடனடியாக ஆய்வு செய்து, அளவுக்கு அதிகமாக மண் அள்ளுவதைத் தடுக்க வேண்டும். ஏற்கெனவே அதிக ஆழத்துக்கு மண் அள்ளிய பகுதிகளைச் சீரமைக்க வேண்டும். இல்லையெனில் மண் அள்ளுவதைத் தடுக்கும் போராட்டத்தில் தொடர்ந்து ஈடுபடுவோம் என்றனர்.

நவீன இயந்திரங்களை துப்புரவு பணிக்கு பயன்படுத்த வேண்டும்

தீண்டாமை ஒழிப்பு முன்னணி வலியுறுத்தல்

■ மயிலாடுதுறை

தீண்டாமை ஒழிப்பு முன்னணி மாநில பொதுச் செயலாளர் சாமுவேல்ராஜ், மயிலாடுதுறையில் நேற்று செய்தியாளர்களிடம் கூறியது:

எங்கள் அமைப்பினர் பல்வேறு மாவட்டங்களில் பள்ளிகளில் நடத்திய களஆய்வில், மாணவர்களிடம் மட்டுமின்றி ஆசிரியர்களிடமும் சாதிய சிந்தனை உள்ளது தெரியவந்தது. தமிழகத்தில் சாதி அற்ற சமூகத்தை உருவாக்க தொடர்ந்து பிரச்சாரம் செய்து வருகிறோம்.

தீண்டாமை ஒழிப்பு முன்னணியின் 5-வது மாநில மாநாடு, மயிலாடுதுறையில் இன்றும், நாளையும்(ஆக.31, செப்.1) நடைபெறுகிறது.

வெளிநாடுகளில் துப்புரவுப் பணிகளில் நவீன இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. துப்புரவு பொறியியல் துறை உருவாக்கப்பட்டு, பாடமாக கற்பிக்கப்படுகிறது.

ஆனால், இந்தியாவில் மனிதக் கழிவுகளை மனிதனே அகற்றும் நிலை தற்போதும் நீடிக்கிறது.

தமிழகத்தில் துப்புரவுப் பணிகளை நவீன இயந்திரங்கள் மூலம் மேற்கொள்ள வேண்டும். இதற்கான நவீன இயந்திரங்களை தமிழக அரசு உருவாக்க வேண்டும். சென்னை அண்ணா பல்கலைக்கழகத்தில் துப்புரவு பொறியியல் துறையைத் தொடங்க வேண்டும். கல்வி வளாகத்தில் நிலவும் சாதிப் பாகுபாடுகளைக் களைய நடவடிக்கை எடுக்க வேண்டும். சாதிய படுகொலைக்கு எதிரான சட்டத்தை உடனடியாக இயற்ற வேண்டும் என்றார்.

அமைப்பின் மாநிலச் செயலாளர் செல்லக்கண்ணு, மாவட்டத் தலைவர் விஜய், மாவட்டச் செயலாளர் மேகநாதன், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாவட்டச் செயலாளர் சீனிவாசன் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

காரீப் பருவம் நிறைவு; திருவாரூர் மாவட்டத்தில் நெல் கொள்முதல் நிலையங்கள் மூடல்

கடந்தாண்டைவிட 54 ஆயிரம் டன் கூடுதலாக கொள்முதல்

■ திருவாரூர்

காரீப் பருவம் நிறைவடைந்ததையொட்டி, திருவாரூர் மாவட்டத்தில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் நேற்றுடன் மூடப்பட்டன. மேலும், கோடை குறுவையில் கடந்த ஆண்டைவிட 54 ஆயிரம் டன் கூடுதலாக நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது.

திருவாரூர் மாவட்டத்தில் கோடை குறுவை நெல்லை கொள்முதல் செய்வதற்காக மாவட்டம் முழுவதும் 193 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டன. இந்நிலையில், 2024-2025 காரீப் பருவம் நிறைவடைந்ததையொட்டி, மாவட்டத்தில் செயல்பட்டு வந்த நெல் கொள்முதல் நிலையங்கள் நேற்றுடன் மூடப்பட்டுவிட்டன.

இதுகுறித்து தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் தெரிவித்திருப்பது:

கோடை குறுவை நெல் கொள்முதலில் 2023-24-ம் நிதியாண்டில் 1,34,101 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்ட நிலையில், நிகழாண்டு 1,88,586 டன் நெல் கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. இது, கடந்தாண்டைவிட 54,485 டன் கூடுதலாகும்.

முதலாண்டு கோடை குறுவை சாகுபடிக்கான கொள்முதல் நிறைவடைந்ததுடன், காரீப் பருவ கொள்முதல் நிறைவடைந்து விட்டதால் மாவட்டம் முழுவதும் செயல்பட்டு வந்த 193 நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் நேற்றுடன் மூடப்பட்டன.

இதைத்தொடர்ந்து, குறுவை அறுவடை தொடங்கி நடைபெற்று வருவதால், 2025-2026-ம் ஆண்டுக்கு நாளை (செப்.1) மீண்டும் கொள்முதல் நிலையங்கள் திறக்கப்பட்டு, அன்று முதல் தற்போது அறுவடை செய்யப்படும் குறுவை நெல் கொள்முதல் பணி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் கூறியது:

செப்.1-ம் தேதி நேரடி நெல் கொள்முதல் நிலையங்களைத் திறக்கும்போது, கடந்த காலங்களைப்போல காலம் தாழ்த்தி கொள்முதல் செய்யாமல், உடனுக்குடன் கொள்முதல் செய்யும் வகையில் தேவையான சாக்குகள் உள்ளிட்ட தளவாடப் பொருட்களை கொள்முதல் நிலையங்களுக்கு வழங்க வேண்டும். கொள்முதல் செய்யும் நெல்லுக்கு உரிய தொகையை உடனடியாக விவசாயிகளுக்கு வழங்க வேண்டும் என்றனர்.

திருவிடைமருதூர் அருகே வீட்டின் பூட்டை உடைத்து நகை திருட்டு

■ கும்பகோணம்

தஞ்சாவூர் மாவட்டம் திருவிடைமருதூர் வட்டம் குறிச்சி அய்யனார் கோயில் தெருவைச் சேர்ந்தவர் இலக்கியா தேவி(33). அணைக்கரையில் உள்ள மருந்துக் கடையில் வேலை செய்து வருகிறார். தினமும் காலையில் வேலைக்குச் செல்லும் இவர், வேலை முடிந்து தாய் வீட்டுக்குச் சென்று உறங்கிவிட்டு, மறுநாள் காலை வீட்டுக்குத் திரும்பி, வேலைக்குப் புறப்படுவது வழக்கம்.

இதன்படி, நேற்று முன்தினம் இரவு தாய் வீட்டுக்குச் சென்ற இலக்கியா தேவி, நேற்று காலை தனது வீட்டுக்குத் திரும்பினார். அப்போது, வீட்டின் முன்பக்க கதவு உடைக்கப்பட்டு, பீரோவை உடைத்து 3 பவுன் நகை மற்றும் சில பொருட்கள் திருடு போயிருப்பது தெரியவந்தது. இதுகுறித்து பந்தநல்லூர் போலீஸார் வழக்குப் பதிவு செய்து விசாரிக்கின்றனர்.

காரைக்காலில்

பாங்க் ஆஃப் இந்தியா என்ஆர்ஐ வாடிக்கையாளர்களுடனான கலந்துரையாடல்

■ காரைக்கால்

காரைக்கால் மாவட்டத்தில் பாங்க் ஆஃப் இந்தியா காரைக்கால், திருநள்ளாறு வங்கி கிளைகளில் என்ஆர்ஐ கணக்கு வைத்துள்ள வாடிக்கையாளர்களுடனான ஆலோசனை மற்றும் கலந்துரையாடல் கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

வங்கியின் சென்னை மண்டல மேலாளர் மோகன் மரேத்தி வாடிக்கையாளர்களை வரவேற்றார். மண்டல அலுவலர் என்.பிரீத்தி அறிமுக உரையாற்றினார். மண்டல துணைப் பொது மேலாளர் கே.ராமதாஸ் வங்கியின் செயல்பாடுகள், திட்டங்கள் குறித்து கூறினார்.

காரைக்கால் கிளை மேலாளர் ஜி.பிரவீன்குமார் நன்றி கூறினார். திருநள்ளாறு கிளை மேலாளர்கள் ராகுல் ராஜா, ராகவன், காரைக்கால் மேலாளர் எஸ். சண்முகப்பிரியா, வங்கி அலுவலர் ஆர்.ஷாலினி மற்றும் அலுவலர்கள், வாடிக்கையாளர்கள் கலந்துகொண்டனர்.

பின்னர், சென்னை மண்டல மேலாளர் மோகன் மரேத்தி செய்தியாளர்களிடம் கூறியதாவது:

பாங்க் ஆஃப் இந்தியா சென்னை மண்டலம் சார்பில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் 150-க்கும் மேற்பட்ட வாடிக்கையாளர்கள் பங்கேற்றனர். வங்கியின் புதிய திட்டங்கள், சைபர் கிரைம் செயல்பாடுகள் உள்ளிட்டவை குறித்து எடுத்துக் கூறப்பட்டுள்ளது. வாடிக்கையாளர்கள் கோரிக்கையை ஏற்று திருநள்ளாறு வங்கி கிளையில் பணம் எடுத்தல் மற்றும் செலுத்தும் வசதியுடன் கூடிய ஏடிஎம் இயந்திரம் விரைவில் அமைக்கப்படும் என்றார்.

திருவாரூரில் அண்மையில் நடைபெற்ற தொழிலாளர் வருங்கால வைப்பு நிதி குறைதீர் முகாமில் மனுவை பெற்றுக் கொண்ட மாவட்ட அமலாக்க அதிகாரி சோமசுந்தரம். உடன், மூத்த சமூக பாதுகாப்பு அலுவலர் மாசிலாமணி, ஏழுமலையான் பாலிடெக்னிக் கல்லூரி முதல்வர் சுமதி ஆகியோர்.

'போதையில்லா இந்தியா' விழிப்புணர்வு போட்டியில் வென்றோருக்கு பரிசளிப்பு

■ காரைக்கால்

மத்திய அரசின் சமூகநீதி மற்றும் அதிகாரம் அளித்தல் அமைச்சகத்தின் மூலம் செயல்படுத்தப்படும் நஷா முக்த் பாரத் அபியான் (போதையில்லா இந்தியா) என்ற திட்டத்தின் 5-ம் ஆண்டு நிறைவையொட்டி, காரைக்கால் காமராஜர் திடலில் அண்மையில் போதைப் பொருட்களுக்கு எதிராக கல்லூரி மாணவர்கள் பங்கேற்ற விழிப்புணர்வு கலைநிகழ்ச்சி போட்டி நடைபெற்றது. இதில் 8 கல்லூரிகளில் இருந்து 9 அணிகள் பங்கேற்றன.

இப்போட்டியில் வெற்றிபெற்ற அணிகளுக்கு காரைக்கால் ஆட்சியர் அலுவலகத்தில் பரிசுகள் வழங்கப்பட்டன. முதலிடம் பெற்ற விநாயகா மிஷன் நர்சிங் கல்லூரிக்கு ரூ.10 ஆயிரம் காசோலை, 2-ம் இடம் பெற்ற அரசு மகளிர் பாலிடெக்னிக் கல்லூரிக்கு ரூ.8 ஆயிரம் காசோலை, 3-ம் இடம் பெற்ற இமாக்குலேட் நர்சிங் கல்லூரிக்கு ரூ.6 ஆயிரம் காசோலை மற்றும் 3 அணிகளுக்கும் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சியர் ரவி பிரகாஷ் வழங்கி பாராட்டினார்.

படிவம் G
விருப்பம் தெரிவித்தலுக்கான அழைப்பு
ஹர்ஷிதா ஹாஸ்பிட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட்
இந்தியா, தமிழ்நாடு, மதுரையில் ஹெல்த்கேர் சர்வீஸ்/ஹாஸ்பிட்டல் செயல்பாடு (திவால்நிலை மற்றும் திவால்நிலைகுழு ஆப் இந்தியா (பெருநிறுவன நபர்கள் தொடர்பு நிலை செயல்முறை) விதிமுறைகள், 2016-ன் ஒழுங்குமுறை 36A-ன் துணை விதி (1)-ன்கீழ்)

வ. எண்.	தொடர்புடைய விபரங்கள்	
1.	நிறுவன கடன்தாரர் பெயர் அத்துடன் PAN & CIN / LLP எண்.	ஹர்ஷிதா ஹாஸ்பிட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட் CIN : U85100TN2009PTC071421 PAN : AACCH6630A
2.	பதிவு அலுவலகம் முகவரி	128/1-ஏ, அயன்பாப்பகுடி கிராமம், அருப்புக்கோட்டை பிரதான சாலை, அவனியாபுரம், மதுரை - 625012 தமிழ்நாடு.
3.	இணையதளத்தின் URL	இல்லை
4.	பெரும்பாலான நிலையான சொத்துக்கள் அமைந்துள்ள இடத்தின் விவரங்கள்	ஹாஸ்பிட்டல் வளாகம், எண்.128/1-ஏ, அயன்பாப்பகுடி கிராமம், அருப்புக்கோட்டை பிரதான சாலை, அவனியாபுரம், மதுரை - 625012.
5.	பிரதான தயாரிப்புகள்/சேவைகளின் நிறுவப்பட்ட திறன்	நிர்வாகத்தால் தெரிவிக்கப்பட்டபடி 100 படுக்கை ஹாஸ்பிட்டல்
6.	இறுதி நிதியாண்டில் விற்பனையான பிரதான தயாரிப்புகள்/ சர்வீஸ்களின் அளவு மற்றும் மதிப்பு	தணிக்கை செய்யப்பட்ட நிதியாண்டின் அறிக்கையின்படி: வருவாய் 2022-23-ல் ரூ.35.13 கோடிகள் 2021-22-ல் ரூ.35.79 கோடிகள் 2020-21-ல் ரூ. 28.40 கோடிகள்.
7.	பணியாளர்கள்/வேலையாட்கள் எண்ணிக்கை	நிர்வாகத்தால் அறிவிக்கப்பட்ட தேதி வரை யாரும் இல்லை
8.	இரண்டு வருடங்களின் கடைசியாக கிடைக்கப்பெற்ற நிதிநிலை அறிக்கைகள் (அட்டவணைகளுடன்), உள்ளிட்ட கூடுதல் விவரங்கள், கடன்தாரர்களின் பட்டியல்கள் URL-ல் கிடைக்கும்	cirphppl1@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் விவரங்களை பெற்றுக்கொள்ளலாம். கடன்தாரர்களின் விவரங்களை (FC & OC) கீழே லிங்கில் பார்க்கலாம் : https://ibbi.gov.in/en/claims/claim-process/U85100TN2009PTC071421
9.	பிரிவு 25(2)(h) ன்கீழ் தகுதியான தீர்வு விண்ணப்பதாரர்களுக்கான தகுதி URL -ல் கிடைக்கிறது	cirphppl1@gmail.com என்ற மின்னஞ்சல் மூலம் விவரங்களை பெற்றுக்கொள்ளலாம்.
10.	விருப்ப வெளியீடு கோருதல் பெறுவதற்கான கடைசி தேதி	15.09.2025
11.	வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களின் தற்காலிக பட்டியல் வெளியிடப்படும் தேதி	25.09.2025
12.	தற்காலிக பட்டியலில் ஆட்சேபனைகளை சமர்ப்பிப்பதற்கான கடைசி தேதி	30.09.2025
13.	வருங்கால தீர்மான விண்ணப்பதாரர்களின் இறுதிப் பட்டியல் வெளியிடப்படும் தேதி	10.10.2025
14.	தகவல் குறிப்பாணை வெளியிடப்பட்ட தேதி மதிப்பீட்டு அணி மற்றும் வருங்கால தீர்மான மனுதாரர்களுக்கு தீர்வுத் திட்டத்திற்கான கோரிக்கை	15.10.2025
15.	தீர்மான திட்டங்களை சமர்ப்பிப்பதற்கான கடைசி நாள்	20.11.2025
16.	விருப்ப செயல்முறை சமர்ப்பிக்க செயல் மின்னஞ்சல் id	cirphhpl1@gmail.com
17.	நிறுவன கடன்தாரரின் MSME பதிவு நிலையின் விவரங்கள்	MSME -ன்கீழ் பதிவு செய்யப்பட்டது UDYAM பதிவு எண். : UDYAM-TN-12-0000639

அனிஷ் அகர்வால் | தீர்மான நிபுணர்
ஹர்ஷிதா ஹாஸ்பிட்டல்ஸ் பிரைவேட் லிமிடெட்-க்கா (CIRP-ன்கீழ்)
பதிவு எண். : IBBI/IPA-001/IP-P-01497/2018-19/12256
பிளாட் எண். சி-1305 சுமத்துரா நந்தனம், ஹூடி, கிராபட் இந்தியா சாலை, பெங்களூரு, கர்நாடகா-560 048 மொபைல் : 9798571555 I Main id : cirphhpl1@gmail.com
ஞாயிற்றுகிழமை, 31.08.2025

केनरा बैंक Canara Bank
भारत सरकार का उपक्रम A Government of India Undertaking
सिंडिकेट Syndicate

கனரா வங்கி, சொத்து மீட்பு மேலாண்மை கிளை, செயின்ட் மேரிஸ் வளாகம், வட்ட அலுவலகம், முதல் தளம், கீழ வெளி வீதி, மதுரை–625001.

விற்பனை அறிவிப்பு (அசையா சொத்துக்கள் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு)

பிணைக்கடன், நிதிச் சொத்து மறுசீரமைப்பு, பிணைச் சொத்து பாதுகாப்பு அமலாக்கச் சட்டம் 2002 & பிணைக் காப்பு (அமலாக்கம்) விதிகள் 2002–இன் விதி 8(6)–இன் கீழ் அசையாச் சொத்துக்களின் விற்பனைக்கான மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு. இதன் மூலம் பொது மக்கள் & குறிப்பாக கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர்(கள்), ஜாமீன்தாரர்(கள்) மற்றும் அடமானதாரர்(கள்) ஆகிய அனைவருக்கும் அறிவிப்பது யாதெனில், எங்கள் வங்கியின் கடன்தாரர்/ஜாமீன்தாரர் **1. திரு.மதி.S.சூசையம்மாள்** (கடன்தாரர்) க/பெ.செங்கோல் உடையார், **2. திரு.S.பேபரிக்** (இணைக் கடன்தாரர்) த/பெ.செங்கோல் உடையார், **3. திரு.ஜெகன் செங்கோல் உடையார்** (இணைக் கடன்தாரர்) த/பெ.செங்கோல் உடையார் ஆகியோர் மதுரை சொத்து மீட்பு மேலாண்மை கிளைக்கு செலுத்த வேண்டிய கடன் நிலுவைத் தொகை 31.07.2025 அன்று **ரூ.75,25,192.75** (ரூபாய் எழுபத்தைந்து இலட்சத்து இருபத்தைந்தாயிரத்து நூற்று தொன்னூற்று இரண்டு & பைசா எழுபத்தைந்து மட்டும்) + 01.08.2025 முதல் வட்டி & பிற செலவினங்கள் சேர்த்து வங்கி வசூலிக்கும் பொருட்டு, கனரா வங்கி, வல்லம் கிளையின் அங்கீகாரம் பெற்ற அதிகாரியால் அடையாள உடமையாக்கப்பட்டுள்ள பின்வரும் அசையா சொத்துக்களை, **"எங்கு உள்ளதோ", "எப்படி உள்ளதோ", "எந்நிலையில் உள்ளதோ அப்படியே"** என்ற முறையில் **23.09.2025** அன்று மின்னணு ஏலத்தில் விற்பனை செய்யப்படவுள்ளது.

அசையா சொத்துக்களின் விவரம் : சொத்து எண்.1 : உரிமையாளர் – திருமதி.சூசையம்மாள். தஞ்சாவூர் பதிவு மாவட்டம், வல்லம் சார் பதிவு மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, நஞ்சிக்கோட்டை கிராமம், பழைய சர்வே எண்.192 பார்ட், தற்போது சிறப்பு தாசில்தார் நத்தம் நிலவரி திட்டம் ஆணைப்படி, நத்தம் நிலவரி திட்டம், மனைவரை பட்டா எண்.2057, புதிய சர்வே எண்.192/11–இல் கிழமேல் வடக்கே 10.8 மீட்டர் (35½ அடி), தெற்கே 11.5 மீட்டர் (36 அடி), தென்வடல் மேற்கே 14.2 மீட்டர் (46½ அடி), கிழக்கே 14.6 மீட்டர் (48 அடி). மொத்தம் 1689 சதுரடி (157 சதுர மீட்டர்) காலி மனை. **நான்கு மால் :** டான் பாஸ்கோ தெருவிற்கு தெற்கே, பொது வழிப்பாதைக்கு வடக்கே, சர்வே எண்.192/112–இல் லூர்துசாமி & பிறர் பிளாட்டிற்கு கிழக்கே, சர்வே எண்.192/110–இல் துரைசாமி & பிறர் பிளாட்டிற்கு மேற்கே.

சொத்து எண்.2 : உரிமையாளர் – திரு.S.பேபரிக். தஞ்சாவூர் பதிவு மாவட்டம், வல்லம் சார் பதிவு மாவட்டம், தஞ்சாவூர் தாலுகா, நஞ்சிக்கோட்டை வட்டம், மாதக்கோட்டை கிராமம், தாசில்தார் வழங்கிய பட்டா பாஸ் புத்தக எண்.119719, தஞ்சாவூர் எண்.80, நஞ்சிக்கோட்டை கிராமம், பட்டா எண்.6976, சர்வே எண்.187/2–இல் உள்ள 0.10.0.ஏர்ஸ்=25 சென்டுகள் காலி வீட்டு மனை. **நான்கு மால் :** பொது வழிப்பாதைக்கு தெற்கே, R.S.எண்.187/9–ற்கு வடக்கே, செங்கோல் உடையார் சொத்து & R.S.எண்.187/1–ற்கு கிழக்கே, R.S.எண்.187/3–ற்கு மேற்கே, ஸ்கெட்ச் படி கிழமேல் வடக்கே 19.6 மீட்டர் (64 அடி), தெற்கே 21.0 மீட்டர் (69 அடி), தென்வடல் கிழக்கே 49.4 மீட்டர் (162 அடி), மேற்கே 49.6 மீட்டர் (163 அடி). மொத்தம் 10806¼ சதுரடி காலி வீட்டு மனை.

சொத்து எண்.1 நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ.**1,11,60,000/-** (ஒரு கோடியே பதினொன்று இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) முன்வைப்புத் தொகை : ரூ.**11,16,000/-** (பதினொன்று இலட்சத்து பதினாறாயிரம் மட்டும்)

சொத்து எண்.2 நிர்ணயிக்கப்பட்ட விலை ரூ.**75,86,000/-** (எழுபத்தைந்து இலட்சத்து எண்பத்தாறாயிரம் மட்டும்) முன்வைப்புத் தொகை : ரூ.**7,58,600/-** (ஏழு இலட்சத்து ஐம்பத்தெட்டாயிரத்து அறுநூறு மட்டும்)

ஏல விற்பனை தேதி : 23.09.2025.
முன் வைப்புத் தொகை செலுத்துவதற்கு கடைசி நாள் 22.09.2025 மாலை 4.00 மணி வரை

விரிவான விற்பனை விதிகள் & நிபந்தனைகளுக்கு வங்கியின் இணையதள முகவரியான "https://baanknet.com/" என்ற லிங்க்கில் சென்று பார்க்கவும் அல்லது **கனரா வங்கி, மதுரை சொத்து மீட்பு மேலாண்மை கிளை, முதன்மை மேலாளரை** (தொலைபேசி எண் : **0452-2335348**, அலைபேசி எண் : **94890 46509**) அனைத்து வேலை நாட்களிலும் வேலை நேரத்தில் அணுகித் தெரிந்து கொள்ளலாம்.

நாள் : 30.08.2025
இடம் : மதுரை

அங்கீகாரம் பெற்ற அதிகாரி
கனரா வங்கி

UJJIVAN SMALL FINANCE BANK

பதிவு அலுவலகம்: கிரேப் கார்டன், எண்.27, 3வது A குறுக்கு, 18வது மெயின், கோரமங்கலா 6வது பிளாக், கோரமங்கலா, பெங்களூர்-560095.
கிளை அலுவலகம்: எண்.16, தரைத்தளம், பிரீமியர் ஏவியோன், நியூ ரெயில்வே ஸ்டேஷன் ரோடு, கும்பகோணம், தமிழ்நாடு - 612001

இ-ஏல விற்பனை அறிவிப்பு

கடனீட்டு சொத்துக்களை ரொக்கமாக்குதல் நிதிச்சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் கடனீட்டு சொத்துக்கள் அமலாக்கச் சட்டம் 2002 பாதுகாப்பு நடைமுறை விதிகள் 2002 விதி எண்.8(6) & 9(1)-ன் கீழ் அசையா சொத்தின் இ-ஏல விற்பனை அறிவிப்பு.

SARFAESI சட்டம் 2002 பிரிவு 13(4) ன்கீழ் உஜ்ஜிவன் ஸ்மால் பைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் தமக்குள்ள அதிகாரத்தை பயன்படுத்தி பின்வரும் சொத்துக்களை சுவாதீனம் செய்துள்ளார். கடன் நிலுவைத் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழக்கண்ட கடன் கணக்குகளின் அடமான சொத்துக்களை, "உள்ளது உள்ளவாறு" மற்றும் "உள்ள இடத்தில் உள்ளவாறு" எனும் அடிப்படையில் கீழ்க்கண்ட தேதியில் விற்பனை செய்யப்படும் என இதன் மூலம் கடன்தாரருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறிவிக்கப்படுகிறது.

கடன் கணக்கு எண் / கடன்தாரர்கள் பெயர்	(i) 13-2 அறிவிப்பு தேதி & நாளது தேதிப்படி கோரிக்கையில் கோரப்பட்ட கடன்தொகை (ii) சுவாதீனம் எடுத்த தேதி	23.07.2025 அன்றுள்ளபடி கடன் நிலுவைத்தொகை	குறைந்தபட்ச கேட்பு விலை	டேவணித் தொகை (EMD)
1628218860000003 & 1628210090000004 1.M/s. துர்கா தேவி டெக்ஸ்டைல்ஸ் 2.Mr. கிஷோர் குமார் 3.Mrs.நீத்து வினோத் புலோர்	(i) 28.06.2022 (ii) 24.06.2022 அன்றுள்ளபடி ₹ 45,39,297/- (ரூபாய் நாற்பத்து ஐந்து லட்சத்து முப்பத்து ஒன்பதாயிரத்து இருநூற்று தொண்ணூற்று ஏழு மட்டும்) (ii) அடையாளபூர்வ சுவாதீனம் - 08.02.2023 & நேரடி சுவாதீனம் - 14.06.2025	₹ 79,44,611.40 (ரூபாய் எழுபத்து ஒன்பது லட்சத்து நாற்பத்து நான்காயிரத்து அறுநூற்று பதினொன்று மற்றும் பைசா நாற்பது மட்டும்)	₹ 54,76,000/- (ரூபாய் ஐம்பத்து நான்கு லட்சத்து எழுபத்து ஆறாயிரம் மட்டும்)	₹ 5,47,600/- (ரூபாய் ஐந்து லட்சத்து நாற்பத்து ஏழாயிரத்து அறுநூறு மட்டும்)

சொத்து விவரம்: கும்பகோணம் பதிவு மாவட்டம் மற்றும் கும்பகோணம் சார் பதிவகம் எல்லைக்குட்பட்ட T.S.எண்.1023 & 1024, **கதவு எண்.23, 23A, நகராட்சி 7வது வார்டு, முட்டளி தெரு, எண்.2, மேலகாவேரி தெரு, கும்பகோணம் டவுன், தஞ்சாவூர் மாவட்டம்** என்னும் முகவரியில் கிழக்கு மேற்காக இரண்டு பக்கமும் 27 அடி, தெற்கு வடக்காக இரண்டு பக்கமும் 75 அடி, **ஆக மொத்தம் 2025 சதுர அடி (188.13 சதுர மீட்டர்) நிலம் மற்றும் RCC கூரைப்போட்ட குடியிருப்பு கட்டிடம்,** அதனுடன் இணைந்த துண்டுகளும், பகுதிகளும். எல்லைகள்: வடக்கு: தெரு, கிழக்கு: சுவாமிநாதன் வீடு மற்றும் பின்புறம், மேற்கு: தெரு, தெற்கு: ரஹிம் வீடு மற்றும் பின்புறம்.

**இ-ஏல தேதி மற்றும் நேரம் : 09.10.2025 காலை 11.00 மணியிலிருந்து நண்பகல் 12.00